கடவுள் துணை.

# சென்னை லோகோபகாரி பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்ட இல்லறத்தில் புருஷாள் பெண் மணிகள் யாவரும் வாசித்து தெரிந்து நடந்துக்கொள்ளக்கூடிய

# நீதிமொழிக் கதைகள்.

(விசாலாக்ஷி அம்மாள், சப் எடிட்டர்.)

(90) எத்தனை பிரயத்னம் செய்தாலும் மூத்தனது அருளன்றி காரியம் முடியாது. சிவானுக்கிரகம் அதியவசியம். சிவகிருபையில்லாமல் எந்த கருமமும் இனிதாய் முடியாது. ஆதலின் எப்போதும் சிவ சிவ என்று தியானஞ்செய்யக்கடவோம்.

(91) அன்னதானம்:—இந்நகர் ஹைகோர்ட் வக்கீல் மிஸ்டர் V. கிருஷ்ணசாமி ஐயர் தம்முடைய பெண்ணின் கலியாணத்தையொட்டி 1000 ஏழைகளுக்கு இந்தவாரத்தில் அன்னதானஞ்செய்தார்.

(வா. ப. 14-7-05.)

(92) இந்த துர்க்குணத்தால் அநேகர் செய்யத்தகாத செய்கைகளைச் செய்கிறார்கள். பொருமையுள்ளவர் பொய்சொல்லவும் கொலைபுரியவும் திருடவும் அஞ்சுவார், சிறுகுழந்தையைக்கண்டால் வைகிறது பெரியோர்களைக்கண்டால் பரிசிக்கிறது, சிலரை ஏசுகிறது, ஓயாமல் கத்துகிறது, வழங்கத்தகாத சொற்களால் வசனிக்கிறது, தனக்குச்சொந்தமில்லாத சாமான்களை மெள்ளயாருக்கும் தெரியாமல் கொண்டுபோகிறது அற்ப விஷயத்துக்கும் சண்டைக்கு ஆயத்தப்படுகிறது இவைமுதலியன பொருமைக்காரர்களின் தொழில்.

(93) "புலி பசித்தாலும் புல்லைத்தின்னாது" என்னும் பழமொழி போல் யோக்கியர்கள் எத்தனைபணம் கொடுப்பதாய்க்கூறினாலும் பொய் சொல்லமாட்டார்கள் அவர்களுடைய மனதைப்பிரர் கெடுக்கமுடியாது. எத்தனை தரித்திரத்தை யனுபவித்தாலும் துஷ்கிருத்யத்தில் பிரவேசியார்.

(வா. ப. 10-3-05.)

(94) அறியாமை, அகம்பாவம், அபிமானம், அசூசை, ஆசை ஆகிய ஐந்து விரோதிகள் நமக்குண்டு இவர்களை நம்மிடம் வரவொட்டாமல் தூரத்தினால் ஆத்ம ஞானத்தை அடையலாம். அறிமையானது இன்னது நித்யம், இன்னது அநித்யம் என்றும்; இன்னது பிரயோஜனம், இன்னது அப்பிரயோஜனமென்றும் தெரிந்துகொள்ளாதிருப்பது அகம்

பாவம் என்பது எல்லாம் தான்செய்வதாயெண்ணி கர்வமடைவது ஈசுவரனை மறப்பது. அபிமானம் என்பது பெண்ஜாதி, பிள்ளை, பண்டம் முதலியவற்றில் பிரீதிவைப்பது. அசூசையென்பது பிறருடையபெருமை பொருள், கீர்த்தி இவற்றைக் கண்டு வெறுப்படைவது ஆசையென்பது பிராணனைக்காப்பாற்றவேண்டுமென்றும் இவ்வுலகில் வெகுநாள் வாழவேண்டுமென்றும் விரும்புவது மேற்கூறிய ஐந்து விரோதிகளையும்ஜெயிப்பவனே ஆத்ம விசாரணைசெய்ய யோக்யனாவான். (வா. ப. 14-7-05.)

(95) பாம்பும் அதன்சட்டையும் வேறாயிருப்பதால் பாம்பு சட்டை போயிற்றே யென்ற வியசனமடைகிறதில்லை. அதுபோல் நாம் தேகம் போயிற்றே யென்று கவலைப்படாமலிருக்கவேண்டும்.

(96) "எமனென்னும் கள்ளன்" என்பதுவாயலுடைய நமது சரீரமாகிய கோட்டைக்குட்புகுந்து நடுவிலிருக்கும் விலை மதிக்கத்தகாத ஜீவன் என்னும் இரத்தினத்தை திருடுவதற்காக நாட்களை யெண்ணிக் கொண்டு சுற்றிவருகிறான். ஆதலின் நாம் பகவந்நாமத்தைச் சொல்லி ஜாக்கிறதைப்படவேண்டுமென்று ஓர் பெரியவர் கூறுகிறார்.
(வா. ப. 14-10-04.)

(97) ஆகாயத்திலிருக்கும் ஒரு சந்திரன் தடாகத்திலும் கூபத்திலும் பல சந்திரன்கள்போல்தோன்றுகிறது. இம்மாதிரியே ஒருபொருளாகிய ஆத்மா பல சரீரங்களிலும் பல ஜீவன்களாகத் தோன்றுகிறது.
(வா. ப. 31-10-06.)

(98) "முயற்சி திருவினையாக்கும்" பிரயத்னம்செய்வது பெரியோர்களின் இயற்கை. எவ்வித பிரயத்னம் செய்யத்தக்கது? தனக்கும் பிறருக்கும் நன்மையைப் பயக்கத்தக்க பிரயத்னமே செய்யவேண்டியமுயற்சியாகும். ஒவ்வொரு நாளும் ஈசுவரனை தியானஞ்செய்து நல்லஅறிவும் ஞானமும் உண்டாகும்படி கோரவேண்டும். (வா. ப. 10-3-05.)

(99) "ஆனைவாயில் போனகரும்பு திரும்பிவருமா" என்று ஓர் பழமொழியுண்டு. அதுபோல் மிகுந்ததீக்குணம் உண்டானால் முன்னிருந்த சொற்ப நற்குணங்கூட மறுபடி உண்டாகிறதில்லை. ஒரு குடம் பாலில் ஒரு துளி ஜலம்விழுந்தால் அந்தத் துளி பாலின் குணத்தைப் பற்றுகிறது. ஒருகுடம் ஜலத்தில் ஒருதுளி பால் விழுந்தால் அந்தத்துளி ஜலத்தின் தன்மையை அடைகிறது. இது வஸ்துக்களுக்குள்ள ஸ்வபாவம். இதனாலன்றோ "சேரிடமறிந்துசேர்" என்று ஔவை கூறியிருக்கிறார்.
(வா. ப. 10-3-05.)

(100) "விதியின்பயனறிதல்" அவரவர்களுக்குள்ள ஆயிசும், தொழிலும் இலட்சுமிகடாட்சமும், வித்தையும், செல்வமும், உருவமும், மரணமும் இந்தஏழும் பிரம்மதேவனானவர் சிவகடாட்சத்தினாலேகெற்பத்தில் நிட்சயிப்பார்.

(101) "அகத்தினழகு முகத்தில்தெரியும்" அதாவது ஒருவனுடைய குணத்தை அறியவேண்டுமாயின் அவருடைய முகத்தைப் பார்த்தாலே

தெரியவரும். முகம் பிரகாசமாயிருந்தால் ஹிருதயத்தில் கவலையில்லை யென்றூகிக்கலாம். முகம் சுளித்திருந்தால் உள்ளேகோபம் பொங்குகிற தென்றுணருகிறோம். முகம் பிரகாசம் குன்றி களையேயில்லாதிருப்பின் ஏதோகஷ்டம் நேர்ந்ததென்றும் அதனால் ஹிருதயத்தை வியஸனம் வியாபித்துக் கொண்டிருக்கிறதென்றும் அறிவோம். இப்படியே முகத்தைப் பார்த்தாலேயே அகத்தின் இலக்ஷணம் தெரிந்துவிடும். இப்படியே ஞானிகள், யோகிகள், பெரியோர் இவர்களின் மகிமை அவர்களைப்பார்த்தாலே அறிந்துக்கொள்ளலாம். (வா. ப. 18-8-05.)

(விவரம் நெ. 83 ஐ வாசித்தால் தெரியவரும்.)

(102) "சிவராஜனே தவராஜன்" சிவமூர்த்தியை தியானிப்போர் ஸதா ஸந்தோஷசித்தர்களாயிருப்பார். சர்வமங்களங்களையும் அளிக்க வல்ல பரமேசுவரன் தமது பக்தர்களிடம் பரம பிரீதியாயிருக்கிறார். கொடிய ராக்ஷஸனாகிய இராவணனிடம் கூட ஈசுவரன் அவன் செய்த தோத்திரத்துக்காக அகமகிழ்ந்து கிருபைபாராட்டினார். அபராதத்தை க்ஷமித்து அருள்புரியும் கருணாநிதியான சர்வேசுவரனை ஸதா ஸ்தோத்திரம் செய்யக்கடவோம். (வா. ப. 28-7-05.)

(103) அகண்டாகாரமாகிய பிரம்மம் இன்னதென்று யாராலும் அறியப்படாதது. பிரம்மத்தின் லக்ஷணத்தைச்சொல்லயாரால் சாத்யமாகும் முதலாவது மனுஷன் தன்னுடைய நிஜரூபத்தை யறிந்தால் ஆனந்த மயனாவான். அதை அறிவது எளிதல்ல. அநேக சாஸ்திரங்களைக் கற்றும் பல பெரியோர்களிடம் சந்தேகங்களைக்கேட்டுத் தெளிவடைந்து ஞானத்தை யடையவேண்டும். தீபத்தின் உதவியின்றி இருளிற்செல்வது அபாயகரம்போல் குருவின் உதவியன்றி ஆத்மஞானமடைய முயல்வது அவிவேகம். (வா. ப. 28-7-05.)

(104) காவேரி, கங்கை முதலிய மகாநதிகள் புண்ய சீலர்கட்கும் பாபிகட்கும் ஸ்நாநபானங்களுக்கு உதவுவதுபோல் தர்மஸ்வரூபிகளான உத்தமர்கள் விவேகிள் ஆகிய இருவகையாரோடும் சம்பாஷிப்பார். இதனால் அவ்வுத்தமர்களுக்கு ஒருநாளும் குறைவுண்டாகாது. கருங்கல்மீது எவ்வளவு மழைவருஷித்தாலும் அதைத்துளைக்கமுடியாது. அதுபோல் புத்திசாலியின் மனதைஆயிரம் துஷ்டர்கள் கூடினாலும்கெடுக்கமுடியாது. (வா. ப. 28-7-05.)

(105) சில புஷ்பங்கள் சுவாசனை வீசும், சில புஷ்பங்களில் மணமேயிராது, வேறுசிலபுஷ்பங்கள் துர்க்கந்தத்தைவீசும். ஆயினும் புஷ்பம் என்ற பெயர் எல்லாவித பூக்களுக்கும் பொதுவாய் வழங்குகிறது. இவ்வாறே பத்திரிகை, புத்தகம் என்னும் பதங்கள் பொதுவாயிருப்பினும் பலருக்கும் பிரயோஜனத்தை விளக்கும் பத்திரிகையை வாங்கத்தக்கது. எல்லோருக்கும், நன்மையைப்பயக்கும் புத்தகமே படிக்கத்தக்கது. (வா. ப. 2-7-05.)

(106) "ஜன்மாந்திரமாவது யாது" நம்முடைய ஆத்மா இப்போது வசிக்கும் சரீரத்தையடையுமுன் வேறு சரீரங்களை யடைந்திருந்தும் இனி

இறந்தபின் புதிய சரீரங்களை யடைவதுமே ஜன்மாந்திரம் அதாவது முற்பிறப்பு மறு பிறப்பு என்றும் வியவகாரங்கள் ஜன்மாந்திரம் எனப்படும். இந்த ஜன்மாந்திர ஸித்தாந்தத்தைக் கிறிஸ்துவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அவர்களுக்கு முன்னிருந்தயூதர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஸித்தாந்தத்தை தேசாந்திரிகள் நன்றாய்ப்பரிசீலனை செய்யவில்லை. நம்மவர்கள் ஜன்மாந்திரத்திலும் தேவதாபக்தியிலும் விசுவாசமுள்ளவர்கள். சிலர் ஜன்மாந்திரத்துக்கு விரோதமாய் அர்த்தம் செய்கிறார்கள். தகப்பனுக்கு பிள்ளை பிறப்பது ஜன்மாந்திர மென்கிறார்கள்.

(வா. ப. 14-2-06.)

(107) "சொர்க்கம் நாகம்" முதலிய வியவகாரங்களுண்டாவெனில் ஜெகஜீவபரங்களுண்டென்று நம்புவோர்க்கு ஸ்வர்க்க நரகவியவஹாரங்களுண்டு. பிரம்மம் ஒன்றைத் தவிர மற்றப் பொருள்களில்லையென்று கூறும் பிரம்மஞானிகளுக்கு மேற்கூறிய ஸ்வர்க்க நரகங்களில்லை. இதனால் நாமறிவதுயாதெனில், நாம் ஆத்மஞானத்தை அடையுமளவுஞ் சாஸ்திரங்களில் விதித்திருக்கிற கர்மங்களைச் செய்தே தீரவேண்டுமென்பது. அவ்வாறு செய்யாவிட்டால் பாபமுண்டாகிப் பலஜென்மங்களெடுத்து அவஸ்தைப் படுவோமென்பதிற் கையமில்லை. (வா. ப. 10-3-05.)

(108) வீடு, வஸ்திரம், தேகம், மனம் இவற்றை சுத்தமாய்வைத்துக் கொள்ளவேண்டிய அவசியமென்னவெனில் சுத்தத்தால் ஒருவித மனோத்ஸாக முண்டாகிறதே தகுந்த காரணமென்போம். இப்படி தெய்வஸ்தோத்திரத்தால் மனதுக்கு ஆனந்த முண்டாவதால் அதைச்செய்ய வேண்டுமென்று சகல மதஸ்தர்களும் கூறுகின்றனர். பிறருக்கு ஹிம்சையற்றதும், ஸத்வகுணத்தை விர்த்தி செய்யக்கூடியதும், நிரந்தரமான சந்தோஷத்தை தரக்கூடியதும், பகவத் பக்தியே யாதலின் அதற்காகக் காலத்தைச் செலவிடாதவன் கசடனே.

(109) தேசத்தில் பிரஜைகள் அதிகரிப்பதால் வறுமை உண்டாகிறது. ஒருவனுக்கு அநேக பிள்ளைகள் பிறந்தால் அவர்களைப்போஷிப்பதற்காக ஆஸ்தியை விற்றுக் கடன் படுகிறான். இதனால் குடும்பத்தில் கடன்பெருகி அதைத்தீர்க்கவகையின்றி சொம்புசுவலைகளை விற்றுக்கடனடைத்து தரித்திரத்தை அனுபவிக்கிறார்கள். அதிலும்பஞ்சகால முண்டானால் ஏழைகள் படும் அவஸ்தையைச் சொல்ல முடியாது. எல்லாரும் கல்யாணம் செய்துக்கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. கல்யாணமாகாததால் சரீரசுகம் குன்றுமென்பது சிலருடையஅபிப்பிராயம். டாக்டர்கள் இதை ஒப்பவில்லை மிருகத்தன்மையாகிய காமத்தை புத்திசாலித்தனத்தால் அடக்கி மனதை அவ்வழியிற் செல்லவொட்டாமல் நன்மார்க்கத்தில் திருப்பினால் தேகத்துக்கு அனுகூலம் தேகாரோக்யமுண்டாகும். பலவித பிணிகள் அணுகா.

(110) ஜாரசோரசிகாமணியாகக்கிருஷ்ணமூர்த்தி விளங்கினாரென்று பாகவதத்திற் கூறப்பட்டிருக்கிறது. ஆதலின் தானும் ஜாரனா யிருப்பதாக ஒரு பூமான் சொல்லுகின்றான். அவனுக்குப் பிரதியாக ஒரு ஸ்திரீ ஜாரையாய் இருப்பதற்குப் புராணத்தில் ஆதாரம் தேடினாள். அகப்பட

வில்லை, ஆதலின், வாயைமூடிக்கொண்டு மௌனமாயிருந்தார். ஒரு புருஷன் அநேக புருஷர்களை விவாகம் செய்கிறதில்லை. இதற்கு உபமானம் ஒன்று உண்டு. ஒரு தங்கநகையில் அநேக ரத்னங்களைப் பதிக்கலாம். வெகு அழகாயிருக்கும். ஒரு ரத்னத்தில் அநேக தங்கக்கட்டிகளைப் பதிக்கிறவாடிக்கையில்லை. பார்க்க வெகு அசங்கியமாயிருக்கும்.

(111) "மண்ணாசை பெரிது" நாம் கட்டுகிற வீட்டில் யாவரும் அசுத்தம் செய்யாதபடி கவனிக்கிறோம். ஒருவரையும் வாடகையின்றி வசிக்க விடோம். இந்த மண்ணாசை நம்மை விட்டு நீங்குகிறதில்லை. ஒருஅடி மண்ணை யாராவது வெட்டிக்கொண்டு போனால் தக்ஷணமே அவர் மீது வியாஜ்யம் தொடருகிறோம். இவ்வளவும் உதரபோஷணையைப்பற்றியன்றோ செய்யப்படுகின்றன. நமது தேகம் வசிப்பதற்காகப் பாடுபட்டு வீடுகட்டும் நாம் நமது தேகம் நமக்கு சொந்தமில்லை யென்பதை மறக்கிறோம். இதைவிட அவிவேகம் வேறென்ன உண்டு.

(வா. ப. 27-1-05.)

(112) ஒரு வீட்டைக்கட்டி அதில் குடியிராவிட்டால் புற்றூண்டுகள் முளைத்து பாம்பு பல்லிகள் சேர்வதுபோல், அடிக்கடி குழந்தைகளைக் கண்டிக்காவிட்டால் அவர்களுக்கு பலவித துர்க்குணங்கள் படிந்துவிடும். ஸுசிக்ஷிதர்களல்லாத குழந்தைகள் பெரியவர்களானபின் பரமதுஷ்டர்களாய்விடுவர். ஆதலின் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளின் குணத்தையும் நடத்தையையும் கவனித்து அடிக்கடி கண்டித்துத்திருத்திவரவேண்டும்.

(113) "மழை இல்லை, பனி உண்டு" ஓராண்டுமுழுவதும் இடைவிடாமல் பனி பேய்ந்தாலும் காலத்தில் மழை பொழிவதற்கீடாகுமா? மழை பெய்தாலன்றோ பயிர்விளையும். பனியால் என்ன பிரயோஜனம் அதுபோல் பதினாயிரம் மனுஷ்யர்கள் ஸகாயம் செய்தாலும் தெய்வ சகாயம் இல்லையேல் எந்தகாரியமும் நிறைவேறாது. அநேக பந்துக்கள் விவாகிதையான ஒரு ஸ்திரீக்கு சகாயகர்களாயிருப்பினும் புருஷனுடைய பிரீதியை இழந்தால் என்ன பயன் பெறுவாள்? சதுர்சாஸ்திர பண்டிதனாயினும் தெய்வபக்தியில்லாதவன் மூடனே. வேண்டிய பொருளைப் புதைத்து வைத்து சோற்றுக்குக்கஷ்டப்படுகிறவனை தரித்திரனென்று சொல்லத் தடையென்ன? கங்கைக்கருகே குடியிருந்தும் அதில் ஸ்நானம் செய்யாதவன் பாபிபோல் ஏராளமான திரவியத்தைவைத்துக்கொண்டும் அதைத்தகுந்த விஷயத்தில் செலவு செய்யாமலும் அதனாலுண்டாகும் சந்தோஷத்தை யனுபவியாமலுமிருப்பவன் அவிவேகியே.

(வா. ப. 20-1-05.)

(114) "தென்னமரத்தில் தேள்கொட்ட குட்டிச்சுவரில் நெறி கட்டியது" போல். பொருளைத்தேடுபவர் ஒருவரும் அதையனுபவிப்பவர் வேறுமாயிருக்கிறார்கள். வழியைக்கண்டுபிடிப்பவன் ஒருவன் நடப்பவன் ஒருவன். வீட்டைக்கட்டுவோன் ஒருவன். அதில் வாழ்வோனொருவன். இவ்வாறிருப்பானேன் என்றால் இம்மாதிரி பகவானே செய்திருக்கிறார். திரிபுரதகனஞ்செய்த காலத்துங் காமனை யெரித்தபோதும் பரமசிவன்

தமது நெற்றிக்கண்ணைத் திறந்தார். அதில் பாதிக்கண் பார்வதிக்குச் சொந்தம். அவ்வாறிருக்க இவர் ஒருவரே புராரி, காமாரி யென்னும் பெயர்களைப் பெற்றார், இதுதான் போகட்டுமென்றாலோ மார்க்கண்டேயனை இரக்ஷிக்கவேண்டி எமனை இடதுகாலால் உதைத்தார். பரமசிவனது இடப்பக்கம் முழுவதும் பார்வதிக்குச்சொந்தம். ஆதலின் இடதுகால் அம்மாளுடையதாயிருக்க, காலகந்தான் என்ற பெயரைத் தாமே வைத்துக்கொண்டார். பார்வதிக்கு அவ்விதபெயர் இல்லை. இதென்ன அநீதம்? இப்படியும் பக்ஷபாதஞ் செய்யலாமென்று ஓர் பக்தர் கூறுகிறார் இந்த நியாயத்தை யனுசரித்து தான் உலகத்தில் ஒருவர் தேடியதை மற்றொருவர் அனுபவிக்கிறாரோ? (வா. ப. 20-7-04.)

(115) இப்போதிருக்கும் வெயில் எப்போதுமிருக்குமோ? வெயிலெரிக்கும் நாட்கள் சில. மழைபொழியும் நாட்கள் சில. சில தினங்கள் காற்று வீசும். இப்படியே பருவம் மாறிக்கொண்டிருக்கிறது. இதைப் போல் மனிதர்களின் அபிப்பிராயமும் மாறிக்கொண்டிருக்கின்றது. குற்றத்தை குணமாய் கிரகிக்கும் காலமுமுண்டு. குணத்தை குற்றமாய்க் கொள்ளும் காலமுமுண்டு. ஆதலின் புத்திமான்கள் பரம மித்திரர்களாயினும் காலமறிந்து பேசவேண்டும்.

(விவரம் 1-ம் பாகம் நெ. 12-ஐ வாசிக்கவும்.)

(116) "காடு வாவா என்கிறது வீடு போபோ என்கிறது" என்று சில கிழவிகள் பிறரிடம் பேசுவார்கள். ஐயோ என்னை எமன்கொண்டு போனால் நல்லது என்பார்கள். அந்த எமன் பிரத்யக்ஷமாக வந்தால் அப்போது உள்ளே யோடிப்போய் கதவை மூடிக்கொள்வார்கள். முன்னொரு சமயங் கூலிக்காரகிழவனொருவன் தலையில் பெரிய மூட்டையைத் தூக்கிக்கொண்டு வெயில்வேளையில் நடந்துபோனான். மிகுந்த அலுப்பினாலுங் களைப்பினாலும் அந்தமூட்டையை இறக்கி 'ஐயோ, எமனே நீ வரமாட்டாயா' என்றான். அதைகேட்டு எமன் இதோ வந்து விட்டேனென்று அக்கிழவனுக்கெதிரில் பிரத்யக்ஷமாகி ஏன் என்னைக் கூப்பிட்டாய்? உனக்கு என்ன வேண்டும்? என்றான். கிழவன் பயந்து எனக்கு ஒன்றும் வேண்டாம்; இந்த மூட்டையை என்தலையில்ஏற்றிவை; இவ்வுபகாரஞ் செய்தபின் நீ போகலாம் என்றான். எமன் சிரித்துக்கொண்டு அவ்வாறே மூட்டையை அக்கிழவன்மேல் ஏற்றித் தான் மறைந்து போனான். இந்தக்கதையால் யாருக்கும் இறந்துபோக மனம் வராதென்பதை யறிந்துக்கொள்ளுகிறோம்.

(117) "உலகம் பலவிதம்" ஒருவனுக்கு இரண்டு குமார்த்திகளிருந்தனர். அவர்களில் ஒருத்தியை செங்கலறுத்துச் சூளைபோடுபவனுக்கும் மற்றொருத்தியை தோட்டக்காரனுக்கும் விவாகஞ்செய்து கொடுத்தான். சிலநாட்கள் சென்றபின்பு அவன் தன் மூத்த குமார்த்தியிடஞ்சென்று அம்மா, சுகமா? என்றான் அவள்; 'சுகந்தான். ஆனால் இப்போது பெய்கிற மழை ஒய்ந்து நல்ல வெயிலெரித்தால் செங்கல் உலரும்' என்றாள் பிறகு இரண்டாவது குமார்த்தியிடஞ் சென்று 'என் குழந்தாய், சுகமாயிருக்கிறாயா?' வென்றான். அதற்கவள், அண்ணா, சுகந்தான். ஆனால் இப்போது பெய்கிறமாதிரி மழைபெய்துக்கொண்டிருந்தால் தோட்டத்தில்

செடிகள் நன்றாய் வளரும்' என்றாள். தந்தை அவ்விரண்டு குமாரத்திகளையும் நோக்கி "குழந்தைகாள்! உங்களில் ஒருத்தி மழையையும் மற்றொருத்தி வெயிலையுங்கோருகிறீர்கள். ஆனதால் நான் எதைக்கோருகிறதென்பது தெரியாமல் விழிக்கிறேன்" என்றான். இதனால் உலகம் பலவிதமென்றும், உலகத்தாரெல்லோருக்குந் திருப்தி உண்டாகும்படி நடக்கமுடியாதென்றும் அறிகிறோம்.

(118) மனிதர்களின் மனம் ஒரே நிலையிலிராது. ஒருவேளை செய்த யோசனை மறுவேளை நிலைத்திருக்கிறதில்லை. அண்டையயல் வீட்டுக்கு அடிக்கடி போகும் ஸ்திரீகளை எத்தனை முறை தடுத்தாலும் புத்தி கூறினாலும் போகாமலிரார். பகவத்பக்தி செய்வோரை வேண்டுமென்றாலும் விடார். மனோவிர்த்தி இன்னதென்று யாரும் எளிதில் சொல்லமுடியாது. சிலவேளை நல்லறிவுடன் தர்மகாரியம் செய்யும்படி தோன்றும். மறுசமயம் பிறர்சொத்தை அபகரிக்கஎண்ணும். இதற்காகவே பெரியோர்கள் மனோநாசம் செய்வது முக்கியமானதென்று எடுத்தோதுகிறார்கள். சிஷ்யர்கள் குருக்களிடம் பக்தி செலுத்தவேண்டியது அவசியம். இக்காலத்தில் குருவை ஏகவசனமாய் அழைப்பதுடன் நில்லாமல் அடிக்கவும் சொல்லுகின்றனர். பாபம் அதிகரித்தது. மரியாதை அங்கங்கே மறைகின்றது. மேல்ஜாதி கீழ்ஜாதி என்ற வித்தியாசம் பறந்தது. இதற்கெல்லாம் காரணம் நற்பழக்கம் நல்ல மனஸ் ஸூதர்மமார்க்கங்களை பெரியோர்கள் எடுத்தோதாமலிருந்ததே.

(119) வித்தையும் பொருளையும் கொஞ்சம்கொஞ்சமாய் சம்பாதிக்க வேண்டும் பிரதிதினமும் கூடியமட்டில் சிறிதுபொருளையேனும் வித்தையேனும் சம்பாதித்துவந்தால் அதிக பிரயோஜனத்தை யடையலாம். ஓட்டையிருக்கும்குடத்தில் எத்தனை முறை நீரை ஊற்றினாலும் அக்குடம் நிறையாது. அதுபோல் பொருளைத்தேடுவோன் அதைச்செலவு செய்து கொண்டேயிருந்தால் அவனுடைய பணப்பெட்டிநிறையாது. அர்தத்தை தேடுவோன் அதைக்காப்பாற்றுவதவசியம். வெகு சிரமப்பட்டு மண் குடத்தைச்செய்தவன் அதை கீழே போட்டுடைத்தால் அவனை சமர்த்தனென்னலாமா? அதுபோல் சரீரபிரயாசையாலோ புத்தியின் உதவியாலோ பணத்தை சம்பாதித்தவன் அதை துர்விநியோகம் செய்தால் அவனைவிட அவிவேகி யாரிருப்பார்.

(120) சாக்கடைக்கருகேயிருந்து துர்நாற்றம் வீசுகிறதென்று மூக்கைப்பிடித்துக்கொள்வதுபோல் துஷ்டர்களின் பக்கத்தில் வசித்து கஷ்டமடைகிறேனே யென்று மனம் வருந்துவதில் என்ன பிரயோஜனம்? சாக்கடையை விட்டு விலகினால் துர்க்கந்தம் தொலையும், அதுபோல் துஷ்டனைவிட்டு தூரச்சென்றால் கஷ்டம்நீங்கும். இதனாலேதான் பெரியோர்கள் "துஷ்டனைக்கண்டால் தூரவிலகு" என்று கூறுகிறார்கள்.

(வா. ப. 20-7-04.)

(121) "உலகப்புகழ்ச்சி ஒருவித இகழ்ச்சியே" என்னை புத்திமான், தனவான், தர்மஸ்வரூபி, விவேகி, சூரன், புண்யவான், வித்யவான் என்று கூறும் உலகத்தார் நான் கிஞ்சிற்றுப் பிசகி நடந்தால் புத்திகெட்

டவன் என்று தக்ஷணமே இகழ்வார். இதற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன் மனுஷ்யாளைச் சொன்னால் கோபங்கொள்வர். மிருகத்தின் நிலையைக்கூறுகிறேன். மலம் தின்று சாக்கடையில் புரளும் மகா அசுத்தமான பன்றி பார்க்க அழகாயிருக்கிறதா? உடல்மட்டும் பருத்து ஸர்வ அவலக்ஷணமாயிருக்கிறது. ஆயினும் அதன் மாம்ஸம் வெகு ருசியென்று நாகரீகர்களான தேசாந்திரத்தார்களனைத்து ஒவ்வொருவிருந்திலும் பன்றியின் இறைச்சியைப் பாகம்செய்து பரிமாருகின்றனர். அதுபோல் நான் அடைந்திருக்கும் செல்வம், செல்வாக்கு, வித்தைகீர்த்தி, சூரத்வம் ஆகிய இவைகளெல்லாம் உண்மையாகவே நிஷ்பிரயோஜனமென்மறு எனக்குத் தெரியும் ஏனெனில் அவைகள் நான் அடையவேண்டிய முக்திக்கிஆகாரமாகிய திவ்யஞானததுக்கு இடையூறுகளேயன்றி ஸாதங்களல்ல. ஆயினும் அநேகர் என்னைத்தனவான் என்றும்கல்விமானென்றும் வீரனென்றும் ஸ்தோத்திரம் செய்கிறார்கள். இந்தப்புகழ்ச்சியால் எனக்கு சிறிதேனும் லாபங்கிடையாது. நித்யானந்தமுமுண்டாகாது.

(வா. ப. 18-1-07.)

(122) இவர்கள் பதிவிரதாங்கனைகள். துராசாரஞ்செய்ய மனமொப்பார். பதியினிடம் பரமவிசுவாசம் கொண்டவர்கள். பந்துவர்க்கத்தாரிடம் பயபக்தியோடு நடப்பவர்கள். மாமன் மாமிகளை பார்வதி பரமேஸ்வரர்களாக நினைத்து பூஜைசெய்வார்கள். புருஷர்களெதிரில் நடுங்குவார்கள். புருஷர்கள் நின்றவிடத்தில் நடக்க உடன்படார். பதியே தெய்வம். பதியே பூஜிதன். அவனே ஸ்வர்க்கம். இறக்கும் வரையில் அவனே கதியென்று முழுநம்பிக்கையோடிருப்பார்கள். கஷ்டப்பட்டுழைத்து வீட்டிலுள்ளவர்களை ஆதரவோடு காபாற்றுவார்கள். தர்மபுத்தி இவர்களிடமதிகம். மிருது ஸ்வபாவமுள்ளவர். குணவதிகள். தெய்வபக்தியிலும் ஸத்கர்மாதிகளைச் செய்வதிலும் பிரியமுள்ளவர்கள். எப்போதும் குடும்பவேலைகளையேசெய்துக்கொண்டிருப்பார்கள். தங்கள் காலத்தை விருதாவாய்செலவழிக்காமல் காரியம் செய்வதிலேயே நோக்கங்கொண்டவர்களாயிருப்பவர்இன்னதுவேண்டும்அதுவேண்டாமென்ற வார்த்தைகள் அவர்கள்வாயிலிருந்து புறப்படா. கிடைத்தமட்டில் திருப்தியடைவார்கள் அபலைகளானதால் அவர்களிடம் கருணைபாராட்டும் புண்யமூர்த்திகள் உலகத்தில் அவதரிக்கவில்லை.

(வா. ப. 28-3-06.)

மூன்றாம்பாகம் முற்றிற்று.

வேலூர், 10-8-1907.

வேலூர் சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

கடவுள் துணை.

# சென்னை லோகோபகாரி பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்ட இல்லறத்தில் புருஷாள் பெண் மணிகள் யாவரும் வாசித்து தெரிந்து நடந்துக்கொள்ளக்கூடிய

# நீதிமொழிக்கதைகள்.

(விசாலாக்ஷி அம்மாள், சப் எடிட்டர்.)

(49) ஈசுவரனாகிய ருத்திரன் ஆதிசங்கரராக அவதரித்தார். அந்த மகானால் அத்வைதமதத்தின் உண்மை விளங்கிற்று. ஆதலின் அத்வைத கிரந்தங்களைப்படிக்க விரும்புவோர் ஆதிசங்கரரை ஸ்தோத்திரம் செய்வ தவசியம். சங்கரர் என்னும் பதத்துக்கு சுகத்தைக் கொடுப்பவரென்றரு த்தம். ஜெகத்குருவாகிய சங்கராசாரிய ஸ்வாமிகள் பகவத்கீதை, உபநி ஷத் முதலிய கிரந்தங்களுக்குச் செய்திருக்கும் பாஷியங்களைப் படிப்பவ ர்கள் நித்யமான சுகத்தையடைந்து ஜீவன்முக்தர்களாகின்றனர்.

(50) "தெய்வமிகழேல்" என்ற வாக்யப்படி தெய்வத்தை தியானம் செய்யாமலிருப்பது பிசகு. சகலகாரியங்களும் பகவானை ஆராதிப்பதால் கைகூடும். பகலில் வெளிச்சம்தர சூரியனும், இரவில் பிரகாசமுண்டாக சந்திரனும் நக்ஷத்திரங்களும் ஈசுவரனால் உண்டாக்கப்பட்டன. இவைக ளில்லையேல்கண்களைப்படைத்தாவவென்ன? மேலும் ஸ்நானஞ்செய்வதற் கனுகூலமாக பெரியநதிகளையும் ஏரிகளையும் பகவான் உண்டாக்கியிருக் கிறார். இன்னும் இவைபோன்ற அநேகநன்மைகளை நமக்காகச் செய்தி ருப்பதால் நாம் அவரை பிரதிதினமும் ஸ்தோத்திரஞ்செய்யக்கடவோம்.

(51) "எவ்வுயிரையும் காக்க ஒரு ஈசனுண்டோ இல்லையோ அவ்வுயி ரில் நானொருவனல்லவோ" என்று ஒருவர் பாடியிருக்கிறபடி நம்மைக் காப்பதற்குக்கடவுளிருக்கிறார் என்னும் நிட்சயத்தை நாம் கொண்டால் நமக்கு ஒருநாளும் குறைவுண்டாகாது. யாருக்கு நம்பிக்கையிருக்கிறதோ அவர் சுகத்தையடைவர் தீராச்சந்தேகமுள்ளவர்க்கு எந்நாளும் துக்கமே ஆஸ்தியாகும்.

(52) உலகமே பெரியகோயில். அதில் ஈசுவரனே சட்டம் தன்னைத் தான் சீர்ப்படுத்திக்கொள்வதே ஜபம். தன்னயத்தைப்பாராட்டாமையே பெரிய பூஜை. நியாய ஸமுத்திரத்தின் அலைகள் நன்னடக்கையாகிய கரையில் மோதுகின்ற ஸத்கருமங்களாகிய ரத்நக்கற்களிலிருந்து புண்ய மென்னும் பிரகாசம் உண்டாகிறது. நீறு பூத்த நெருப்புபோல் உலகத்தி லுண்டாகும் கௌரவம் என்று நினைவிற் கொள்ளவேண்டும்.

(53) 'பக்தியிருந்தால்முக்திபொருந்தும்' என்றபடி பக்திஒன்றினால் சாஸ்திரங்களை யறியாத மூடன்கூட முக்தியை அடையக்கூடும். கடவுளி னருளைப் பெருவதற்கு பெரிய பரிக்ஷைகள் தேறவேண்டுமென்பது அவ சியமில்லை. சாஸ்திரத்தில் பாண்டித்யமும் ஜெகத்தில் பகதூர் பட்டமும் இருக்கவேண்டுமென்ற நிபந்தனைகளில்லை. பக்தி ஒன்றுமட்டு மிருந்தாற் போதுமானது.

(54) பகவானுக்கு நாம் சோறு படைக்க வேண்டுமோ? கோயில் கட்டவேண்டுமோ? ஆபரணம் போடவேண்டுமோ? அவர் உலகத்தையே படைத்தவர். பொன்மலையைச்சிருஷ்டிப்பர். சகல ஜனங்களுக்கும் ஸம்பத்தையளிக்க வல்லவர் என்று துராக்ஷேபம் செய்யின் மேலே கண்ட உதாரணத்தையே கூறலாம். அரசனுக்கு ஐந்து ரூபா புஷ்பமாலை அகப்படுவதரிதோ? அரசன் அநேகருக்கு ஸன்மானம் கொடுக்கிறவனல்லவோ. அவனைக்காணவேண்டியும் அவனுடைய தயவை அடைய வேண்டியும் ஆசிரதன் தன் பொருளைச்செலவழித்து புஷ்பமாலை வாங்கிக்கொண்டு போகிறான். இது மரியாதையையும் அன்பையும் குறிக்கிறது. இதைப் போலவே பகவத் பிரீதியை ஸம்பாதிக்கவேண்டி நாம் கோயில்கட்டு கிறோம். விக்ரமாய்ப் பாவித்து வணங்குகிறோம்.

(55) எவனுடைய நற்சுபாவம் ஈசுவரனிடத்திலிருந்து உண்டானது. அதாவது, மனிதன் தேவாம்சமாயிருப்பதால் இயற்கையில் ஸத்குணனாக விருக்கிறான். கெட்டதன்மையானது ஆத்மாவையும் தேகத்தையும் சேர்த்துப்பார்ப்பதால் விளைகிறது. மனுஷன் தன்னைத்தானேபுண்யவானாக்கிக் கொள்ளக்கூடும். புண்யகாரியங்களால் முன்செய்ததீவினைகளைப்போக்கிக் கொள்ளலாம். அயலான் எதுசெய்தால் உனக்கு வெறுப்புஉண்டாகுமோ அதை நீ செய்யலாகாது. "தன்னைப்போல் பிறரை நினை" என்பது சிறந்த வாக்கியம். நன்றிமறவாமையும் பிதிர் பக்தியும், கற்பும், ஸத்தியமும் 100-தலைமுறைவரை நீடித்திருக்கும்.

(56) "ஈசுவரன் எப்போதும் ஸமீபத்திலிருக்கிறார்." என்பதை மறக்கலாகாது. கொடிகள் கிட்டவிருக்கும் மரத்தையே சுற்றிக்கொள்ளும். அதுபோல் நம்முடையமனம் பகவானை பற்றியிருக்கவேண்டுமாதலின் பகவானுடைய கோயிலுக்குச்செல்வதும் அடிக்கடி அவரை தியானிப்பதும் அவசியம். ஒரு கவிகூறினார் விடபுருஷனுடைய கண்கள் ஸ்திரீகளை வெகு தீவிரமாய் நாடுவதுபோல் பக்தர்களின் மனம் பகவானையே பற்றியிருக்கவேண்டும். எத்தனை கஷ்டப்பட்டாலும் கடைசியில் சுகம் கிடைக்குமென்ற நிட்சயமுண்டானால் மனுஷ்யன் வருத்தமடையான். அதுபோல் உலகத்தில் எத்தனைவித துக்கங்களை யனுபவித்தாலும் பகவானுடைய கிருபை நிட்சயமாய்க் கிடைக்கக் கூடிய நிஜபக்தியிருந்தால் போதுமானது.

(57) சித்திரபுத்திரன் பிரதிதினமும்இந்நாஸ்திகன் செய்யும்பாவங்களை குறிக்கும் வழக்கம்போல் கணக்கை யெடுத்து மேஜையின்மேல் வைத்துப் பேனாவை மையில் தோய்த்து உயரத்தூக்கினான். அந்த சமயத்தில் ஷை நாஸ்திகன் பகவத்தியானம் செய்வதாய் உறுதிகூறியதால் இனி குறிக்க வேண்டியபாபமொன்றுமில்லை யென்று ஏங்கிஅப்படியேநின்று விட்டான். பேனாவிலுள்ள மை யெல்லாம் சித்புத்ரனுடைய அங்கவஸ்திரத்தில் வழிந்தது. பிரம்மா இத்தகையபக்தசிரோமணியைமரியாதையாக ஏற்றுக் கொண்டு அவனைப்பரமபதத்துக்கு அனுப்ப வெண்ணி மரியாதைகளில் ஏதேனும் குறைவுநேரிட்டால் பகவானுக்குக் கோபமுண்டாய் விடுமே யென்று பயந்தார். இவ்வளவு பெருமைகளும் பகவத்தியானம் செய்ய உத்தேசித்ததாலே கிடைத்ததெனின் அந்நாமத்தை ஸதா தியானிப்பவர்களின் மகிமையை நாம் சொல்லவும் வேண்டுமோ?

(58) "தானொன்று நினைக்க தெய்வமொன்று நினைத்தது" என்னும் பழமொழிப்படி சிலர் எண்ணிய காரியமொன்றாயும் முடிந்த காரியம் ஒன்றாயும் ஏற்படுவதால் விசனமடைகின்றனர். ஒவ்வொரு கர்மமும் விக்கினமின்றி முடிவதற்கு கடவுளின் அருள்வேண்டும். இதற்காக ஆரியர்கள் விக்நேசுவரை வேண்டிக்கொள்ளுகிறார்கள். ராஜாக்ஞையானது ஜட்ஜ் முதல் போலீஸ்காரன் வரையுள்ள உத்யோகஸ்தர்களால் நிறைவேற்றப் படுவதுபோல் பிரம்மத்தின் கருணையானது பல தெய்வங்களின் மூலமாய் பிரகாசிக்கிறது. இதனால்பல தெய்வங்களுண்டென்று இந்துக்கள் நினைப்பதாய்ப் புறமதஸ்தர்களெண்ணுகின்றனர். இதுதவிர. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொழிலுக்குத் தக்கவாறு ஒரே கடவுளுக்குப்பலவித பெயர்கள் ஏற்பட்டிருக்கின்றனவேயன்றி வேறில்லை.

(59) "தெய்வஸங்கல்பம்" என்றுகூறுவது உண்மையே. சிலதினங்கட்குமுன்பாக பாலக்காட்டைச்சார்ந்த நூரணி கிராமத்துக்குப்போய்க் கொண்டிருந்த ஒரு பிராமணனை மூவர் வழிமறித்து அவனிடமிருந்த 1500 ரூபாயைக் கொள்ளை கொண்டனர். அந்தணன் சும்மாவிராமல் அவர்களை நோக்கி "உங்களை இன்னாரென்றறிவேன், நீங்கள் அகப்படுவீர்கள் என்றான்" இதைக்கேட்டு அம்மூவரும் திடுக்கிட்டு விப்பிரனைக் கொல்ல நினைத்து அவனை மரத்தில் கட்டினார்கள். ஒருவன் வாளினால் தலையை வெட்ட தொடங்கினான். இத்தனை காரியங்களையும் அம்மரத்தின் உச்சிக்கிளையிலுட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்த ஒருநாயர் தன்னிடமிருந்த துப்பாக்கியால் வெட்ட வந்தவனைச்சுட்டு வீழ்த்தினான். மற்றொரு வெடி தீர்த்து இன்னொரு கள்வனுடைய உயிரையும் மாய்த்தான். இவர்களிருவரும் சவமானதைக்கண்டு மூன்றாவது மனிதன் பணத்தைக்கீழே எறிந்து ஓட்டம் பிடித்தான். பிராமணன் 1500 ரூபாயோடு உயிரையும் தப்பவைத்துக்கொண்டு நாயருக்கு நன்றிகூறி ஊருக்கேகினான். வேட்டையாடச்சென்றநாயர் மரத்தின்மேலிருந்து பிராமணனுக்கு உதவிசெய்தது தெய்வஸங்கல்பமன்றோ?

(60) "குதர்க்கம்கொடியதுக்கம்" சிலர் மார்க்கண்டனைக்கண்டது யார்? மறலியைப்பார்த்தது யார். ஈசுவரன் அவனை உதைத்தபோது அருகிலிருந்தவர் யாவர். இதுபாட்டிகள் கூறும் கதை. இதைஅறிவாளியும் நவநாகரி கப்பிரியனுமாகிய நான் நம்புவேனோ வென்பர். முன்னோர்களாகிய மகாரிஷிகள்கூறிய மார்க்கண்டேய உபாக்கியானத்தை நம்பாத இவர்கள் அநேக ஆயிரம் வருஷங்களுக்கு முன் ஸாக்ரடிஸ் இருந்தானென்றும் ஜூலியஸ் ஸீஸர், ஸிஸரோ, கான்யூட் முதலிய புத்திமான்களிருந்தனரென்றும் மகா அலெக்சாந்தர் படையெடுத்து அநேக தேசங்களை ஜயித்தானென்றும் அந்யதேசசரித்திரக்காரர்கள் கூறுவதைமட்டும் நம்புகிறார்களே. இதென்ன ஆச்சரியம்! தன்னுடைய தாயார் தன் தந்தையோடு சேர்ந்து தன்னைப்பெற்றாளென்று நம்பாமல் அண்டைவீட்டு அரங்கன் மாதா அவனை அவளுடைய புருஷனுக்குத்தான் பெற்றாளென்று கூறும் மூடனைப்போல் நமது இதிகாஸபுராணங்கள் பொய் அந்யதேச சரித்திரக்காரர் கூறுவது மெய்யென்று சிலர் சாதிக்கின்றனர். இது அவிவேகத்தால் விளைந்த கேடு. இதைவிட அவமானம் வேறில்லை.

(61) முன்னொருசமயம் பார்வதியானவள் பரமேசுவரனை நோக்கி "ஸ்வாமி, உலகத்தில் அனேக மதங்களுண்டாயிருக்கின்றன. ஆதலின்

எந்த மதத்தை விவேகிகள் அனுசரிக்கவேண்டும்?" என்றாள். அதற்குப் பரமசிவன் "ஹே நங்காய்! எவன் எந்தமதத்தை அனுசரித்தாலுந் தோஷமில்லை. அவனுக்கு என்னுடைய பக்திமட்டுமிருந்தாற் போதும்" என்றார். ஆதலின், வைஷ்ணவர்களானுலுஞ், சைவர்களானுலும், மகம்மதியர்களானுலும், வேறு எந்த மதஸ்தர்களானுலுந் தெய்வபக்தியுடையவர்களே பெரியோர்களெனப்படுவர்.

(62) துஷ்டஸகவாஸத்தால் அகிருத்யங்களைச்செய்வோர் சிலர், அநேகர் குற்றஞ்செய்வதற்கென்றே பிறந்திருக்கிறார்கள். தாய் தந்தையரின் துற்குணம் பிள்ளைகளின் மூளையில்பிறக்கும்போதே நன்றாய்ப்படிந்துவிடுகிறது. அத்தகையோரைக்கண்டால் நாம் இரக்கப்படவேண்டுமேயன்றி கடிந்து கொள்வதிற் பிரயோசனமில்லை. எத்தனை கடுமையான சிக்ஷைவிதித்தாலும் இவர்கள் தங்கள் தீத்தொழிலை விடமாட்டார்கள்.

(63) ஒருமனிதனுக்கு ஸ்திரீயிடம்பிறக்கும் பிள்ளையே கர்மாதிகாரி. அவனே சொத்துக்கு பாத்யஸ்தன். வைப்பாட்டியிடம் பிறக்கும் பிள்ளை எதற்கும் அருகனல்ல. அவனைத்தன்பிள்ளையென்று சொல்லிக்கொள்வதுகூட அவமானம். இதைப்போல் நல்ல குணமாகிய சொந்த ஸ்திரீயிடம் ஜனிக்கும் பெருந்தன்மை அல்லது பெரியதனம் ஏற்றமுடையது. செல்வத்தினுல் அல்லது வேறு ஸந்தர்பத்தால் விளைந்த பெரியதனம் வெறுக்கத்தக்கதே.

(64) "புத்திமானுக்கும் மூடனுக்கும் என்ன வித்தியாசம்? புத்திமானுங் குற்றஞ்செய்கிறான். மூடனுங் குற்றஞ்செய்கிறான். புத்திமானுடைய குற்றம் அவனுக்கு மட்டும் தெரியும். உலகத்தாருக்குத் தெரியாது. மூடன்செய்யுங்குற்றம் அவனுக்குத்தெரியாது. உலகத்தாருக்குத்தெரியும். இதுதான் இருவர்களுக்குமுள்ள வித்தியாசம்.

(65) "மழைஜலம் சுத்தமானதே" ஆயினும் அது விழுங்கூரையுங், குழாயுங், கால்வாயும் அசுத்தமாயிருந்தால் அவைகளின்வழியே ஓடிவரும் மழை நீரும் அசுத்தமாகவேயிருக்கும். அதுபோல், உலகத்திலுள்ள மதங்களெல்லாம் ஆதியிற் சுத்தமாகவே யிருந்தன. பிற்பாடு அவற்றையனுசரித்த மனிதர்கள் அசுத்தர்களாய்ப்போனதால் மதங்களுக்கும் ஒருவித குறைவு உண்டாயிற்றும். (வா. ப. 19-8.04.)

(66) பாபு சங்கரலால் தமது சொந்தபத்திரிகையான அபலாஹிதகாரகாவில் ஒரு விளம்பரம் செய்திருக்கின்றார். ஹிந்துபாலவிதந்துகளுக்குப்புனர்விவாகம் செய்யக்கூடாதென்று ஹிந்துசாஸ்திரத்திலிருந்து ஆதாரம் காட்டுவோர்களுக்குத்தான் 1000 ரூ. இனமளிப்பதாய்க்கூறுகிறார். பிஜனூரில் பாலிகா விதவைகளுக்கு புனர்விவாகம் செய்யவேண்டி ஒரு சங்கம் சேர்ந்திருக்கிறது. இச்சங்கத்தார் காசி, அலஹாபாத், கான்பூர், லக்னோ முதலிய நகரங்களிலிருந்து அனேக ஹிந்துசாஸ்திர பண்டிதர்களை வரவழைத்து விதவாவிவாகம் செய்யலாமென்று சர்ச்சை செய்கிறார்கள். (வா. ப. 18-8-05.)

(67) சிலர் இங்கிலீஷ் கல்வி கற்றவர்களே உயர்ந்தவர்களென்று தப்பெண்ணம் கொண்டிருக்கிறார்கள். இங்கிலீஷ் படித்து உத்தியோகத்திலிருப்பதைவிட வியாபாரஞ்செய்து திரவியம் சம்பாதிப்பவர்களுக்குப் பெருமையும்கௌரவமும்அதிகம். தொழிலாளிகளுக்கும்கௌரவமுண்டு. (வா. ப. 25-5-00.)

(68) மதுரையில் ஒருகலக்டராவது சேர்ந்தார்ப்போல் ஒரு வருஷமாவது நிலைத்திராதது யாரிட்டசாபமோ தெரியவில்லை. சென்ற 7 வருஷங்களிலும் சுமார் 13 கலக்டரவர்கள் போய் மதுரையில் உத்தியோகம் வசித்துள்ளார்கள். (வா. ப. 7-8-06.)

(69) ஒரே தடவையில் நான்கு குழந்தைகளைப்பெறுவது ஆச்சரியமன்றே; கருப்பையில்நான்குசிசுக்களும் எப்படியிருந்தனவோ. பிறந்தபின் அவைகட்குத்தாயார் எவ்விதம் பால் கொடுத்துக் காப்பாற்றுவாளோ; ஈசுவரனது செய்கை யாரே அறிவார்? பெனுகொண்டாதாலூக்காவைச் சேர்ந்த கொட்பஹள்ளி யென்னும் கிராமத்தில் நாராயணப்பன் மனைவி ஒரேமுறையில் இரண்டு ஆண்களையும் இரண்டு பெண்களையும் பெற்று சௌக்யமாயிருக்கிறாள். இவ்வாச்சரிய பிரஸவத்தைப்போல் நாம் இதுவரை கேள்விப்பட்டதில்லை.

(70) மணம்வீசும் புஷ்பத்தைப் பறிக்கச் செல்வது போல் பணம் படைத்த மனிதனை நேசஞ்செய்வது ஜனங்களின் இயல்பு பூவில் நறுமணமில்லையேல் யாவரும் அணுகார். குணம்சிலாக்கியமே. ஆயினும் அதை கிரகிப்பவர்சொற்பம். அனேகருக்குகுணத்தின் அருமைதெரியாது. பணமிருந்தால் பலபண்டங்களையும் வாங்கலாம், குணமிருந்து என்னசெய்யலாம் என்றுகுணத்தை அவமதிக்கின்றனர். புத்திசாலிகள்மட்டுமே குணத்தின் பெருமையையறிவர். மேலும் பணம் கண்ணுற் பார்க்கத்தக்கது. கையால் ஸ்பரிசிக்கக்கூடியது. குணம் அறிவால்அறியத்தக்கது. அறிவில்லாதோர் குணத்தை எப்படி அறிவர் இம்மாதிரியே பேரறிவாகிய பகவானுடைய மகிமையை அற்பஞானத்தால் அறியமுடியாதாகையால்எல்லோரும் பக்தர்களாயிருப்பதில்லை. சிலர்நிரீசுவரவாதம் செய்கின்றதால் இவர்களுக்கு ஈசுவரனுண்டென்று தெரிவிப்பது ஸாத்யமல்ல.

(71) பக்தியில் பத்துவிதமுண்டு முதலாவது சிரவணபக்தி இதைப் பரிக்ஷித்மகாராஜன் அனுசரித்து பதம்எய்தினன். (2) கீர்த்தனபக்தி, இதை சுகர் அனுசரித்து நற்கதிபெற்றார் சுகர்பிரம்மஞானி. (3) ஸமரணபக்தி இதையனுசரித்தவர் பிரகலாதர். (4) சேவனபக்தி, இதைச்செய்துகொண்டிருப்பவள் லக்ஷ்மி. (5) ஸ்ஜனபக்தி, இதைச்செய்து முக்திபெற்றவர் பிருதுராஜன். (6) வந்தனபக்தி இதைச்செய்து பதவியடைந்தவர் அக்குரூார் இவருக்குத்தான் பரமாத்மாசதுர்ப்புஜத்துடன் ஆற்றில் ஸ்நானஞ்செய்தபோது பிரஸன்னமானர். (7) தாஸத்வ பக்தி ஹனுமார் இந்த பக்தியைச்செய்து உத்கிருஷ்டமான நிலைமையையடைந்தார் இவர் சவஜ்ர சரீரமும் சிரஞ்சீவி பட்டமும் படைத்தார். (8) சக்யபக்தி, இதையனுசரித்தவன் அர்ஜுனன். இவனுக்குத்தான் பகவான் தேரோட்டி பார்த்தசாரதி யென்னும் பெயர் படைத்தார். சிநேக தர்மத்தை நன்றாயறிந்த பகவான் தேரோட்டுவதை இழிவென்றெண்ணாததுபோல் நேசர்கள் தாங்கள் ஒருவருக் கொருவர் செய்யும் ஊழியத்தை இழிவாகக்கருதுகிறதில்லை. (9)வது ஆத்மநிவேதனபக்தி, இந்தபக்தியைச் செய்துபாக்கியம்பெற்றவன் பலி. இவனுக்கு பரமாத்மா வாசற் காப்போனாயிருந்தார். (10) வது பிரேமலக்ஷணபக்தி, இதைப் புரிந்தவர் கோபிகைகள். மேற்கூறிய 10-வித பக்திகளில் கடைசியிற் கூறியதே வெகு சிலாக்யமானது.

(72) விதவாவிவாகம்:— ஜான்ஸி நகரில்சென்றஞாயிற்றுக்கிழமை தினம்ஒரு பிராமணன் தன் விதவைமகளுக்குதுவிதியவிவாகஞ்செய்தான். வைதீகர்கள்கூடி வேதசாஸ்திரோக்தமாய் லக்னம் நடத்தினார்கள் 100 வித்வான்கள்கூடி பத்னிகளோடு விவாகமண்டபத்தை அலங்கரித்து வதூவரர்களை ஆசீர்வதித்தனர். ஏராளமான வரிசைகளும் வஸ்திரங்களும் தம்பதிகளுக்கு வெகுமதி அளிக்கப்பட்டன. விவாகமண்டபத்திலேயே விதவா புனர்விவாகம் ஸ்திரீ வித்யாப்யாசங்களைப்பற்றி உபன்யவித்தனர். (வா. ப. 28-11-86.)

(73) ஜுலண்டரில் ஒருவிதந்து விவாகம்நடந்தேறியது. டாக்டர் பண்டித ராமநாத் என்னும் பெரிய மனிதன் ஸாகஸப்பட்டு இக்கல்யாணத்தை நடத்தினர் லாலாதயாரம் என்னும் யௌவனஸ்தன் 20 வயதுள்ள விதந்துவின்மீது பிரியஞ்கொண்டு அவளை விதிவத்தாய் விவாகஞ்செய்துக்கொண்டான் சுமார் 1000-பேர்கள் வந்திருந்து நூதன தம்பதிகளை ஆசீர்வதித்துச்சென்றனர். (வா. ப. 22-8-06.)

(74) மசூலிபட்டணத்தில் புனர்விவாகம் நடந்தேறியது. விதந்துவாகிய ஒரு பெண்ணை எப். ஏ. பரீக்ஷையில் தேறிய ஒரு வித்தியார்த்தி கல்யாணம் செய்துகொண்டான். அநேக பெரியமனுஷ்யர்கள் வந்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர். (வா. ப. 17-2-05.)

(75) குண்டூரில் இந்தமாதம் 16௳ ஒரு விதவாவிவாகம் நடந்தது. பெண்ணுக்குவயது 17 பெரியவளாகுமுன்னமே 4-புருஷன் இறந்துபோனன் இப்போது கல்யாணம் செய்துகொண்டபுருஷனுக்கு இருபத்தோருவயது. இவர்களிருவரும் நல்லகுலத்தில் பிறந்தவர்கள் நியோயிகளின்வகுப்பைச் சார்ந்தவர்கள் வரன் ஜமீன்தார். சாஸ்திரோக்தமாய் நாலு தினங்களும் விவாகம் நடந்தேறியது அநேக பெரியமனிதர்கள் வந்திருந்தனர். (வா. ப. 31-7-03.)

(76) லாஹோர்நகர் பீபல்ஸ்பாங்கு ஏஜெண்டு Mr. L. ராம்ரகமால் என்பவன் தன்மருமகளை புனர்விவாகஞ்செய்யவேண்டுமென்று கூதூகலமாயிருக்கிறார். 30-வயதுக்குள்ள பிராம்மண க்ஷத்திரிய காத்ரி ஜாதியின் பிராயஸ்தர்கள் விவாகஞ்செய்துகொள்ள இஷ்டமிருந்தால் அவருக்கு எழுதிக்கொள்ளலாமென்று விளம்பரபடுத்தியிருக்கிறார். பெண்ணின் வயது 15. (வா. ப. 25-7-06.)

(77) ஸ்திரீகள் எந்ததுக்கத்தை ஸகித்தாலும் பதிவியோகத்தை ஸகிப்பதுகஷ்டம். பதிபாதஸேவையே பெண்களுக்குபூஷணம். பதியின் மனம் வருந்தாதபடி நடப்பவளே பாக்கியவதி. ஸ்திரீகள் தங்கள் காலத்தை வித்யாபுத்தி ஸத்விஷயங்களில் செலவிட்டு பதியை ரஞ்சிக்கச் செய்வது தர்மமாகும்.

(78) விதந்து:— ஆகா! அப்படியே கொடுக்கிறேன். எனக்கொரு சந்தேகம்உண்டாயிருக்கிறது. புருஷனோடு வாழ்கிறவர்கள் சுமங்கலிகள். புருஷனை யிழந்தவர்கள் அமங்கலிகள். புருஷனிருந்தும் அவனைவிட்டு நீங்கி யிருக்கும் பெண்களுக்கு என்னபெயர்?

வைதீகன்:— புருஷனைவிட்டு பிரிந்து தனியே வசிக்கும் பெண்களுக்கு என்னலாபமுண்டு.

விதந்து:—என்னலாபமில்லை? புருஷன் அருகேயிராததாலும் அவனுடைய அதிகாரத்துக்கு மீறியிருப்பதாலும் தன்பந்துக்களோடும் தனக்கு வேண்டியவர்களோடு சல்லாபஞ்செய்யலாம் இதைவிட லாபம் வேறென்ன வேண்டும்?

(வா. ப.) 17-2-05

(79) நம்மவர்கள் கல்யாண காலங்களில் வீண்செலவு செய்வதாகவும் அதை நிறுத்தவேண்டுமென்றும் ஒரு ஸமாஜத்தார் தோன்றிப்பிரஸங்கிக்கிறார்கள். இக்காலத்துக்கல்யாணத்தில் தீவட்டிச்செலவும், தேவடியாள் செலவும், பாணவேடிக்கைமத்தாப்பு பல்லக்குமுதலிய செலவுகளும்நிறைந்திருக்கின்றவேயன்றி அன்னமளிப்பது வெகுவாய்க்குறைந்துபோயிற்று. ஸம்மந்திகளாகிய பிள்ளை வீட்டுக்காரரிற் சிலரும் பெண் வீட்டுக்காரரிற் சிலரும் உண்டு களிக்கின்றனர். இதர மனுஷ்யர்கள் வந்தால் சோறு போடாமல் விரட்டுகிறார்கள். முக்கிய காரியமாகிய பிராமண ஸ்மாராதனையைச் செய்யாமல் பூரிதக்ஷிணைகளைக்கொடாமல் காஸையெல்லாம் பாணத்துக்கும் வெடி மருந்துக்கும் தாவிக்கும் பாட்டுக்கச்சேரிக்கும் செலவழிப்பது உசிதமல்ல. வரதக்ஷிணை இரண்டாயிரம் ரூபா கொடுத்தாரெனில் ஏழைப் பிராமணர்கட்கு என்ன பிரயோஜனம் ஆயிற்று? சொக்கன் வீட்டுக்காசு நக்கன் வீட்டுக்குப்போயிற்று. நூற்றுக்கணக்கான ஏழைகள் வயிறார உண்டு வாழ்த்தினாலன்றோ தம்பதிகள் சிராயுஷ்மந்தர்களாய், சுகஜீவிகளாய் வாழ்வார். சகல தானங்களிலும் சிறந்த அன்னதானத்தைக்கல்யாண காலத்திற் கூட செய்யாமல் ஏழைகளை நெட்டித்தள்ளும் தனவான்கள் கிருபணர்களன்றோ? அத்தகையோர் பணம்காத்த பூதங்களையேயொப்பாவர்.

(80) பகவானே பந்து, மற்றப்பந்துக்கள் கல்யாண காலத்தில் உண்ணவருவர். உற்றார் இறந்தால் உபசாரம் சொல்லவருவர். வேறு விதமான உதவிசெய்யார். ஐசுவரியம் பெருகினால் பொறாமையும் வறுமையுண்டானால் திருப்தியும் அடைவர். உறவோடு போகிறதிலும் ஒரு கட்டு விறகோடு போகலாமென்று பழமொழியுண்டு உறவினரைவிட நண்பர்கள் நல்லவர்கள். கல்வியின் கொடுமையால் அனுகூல சத்துருக்கள் அதிகப்படுகிறார்கள். இவர்கள்பேசுவதெல்லாம் நீதியே, அனுசரிப்பது அநீதியே வாய்பேச்சு வெல்லம், கை கருணைக்கிழங்கு என்பது போல் புத்தி சொல்ல முன்வருவர். உதவிசெய்யப்பின்னிடைவர். காசு கேட்டால் காதவழி விலகுவர். உதவிசெய்யென்றால் ஓட்டம் பிடிப்பர், பொய்யும் சூதும் வஞ்சனையும் நெஞ்சத்தில் குடிகொண்டிருக்கின்றன. பணங்கொடுக்கும் வரை குணவான் என்பர், அது கொடாவிட்டால் பைத்யக்காரன் என்று சாதிப்பர். தமக்குச்செய்த நன்றியைச்சிறிதாயும் தாம் செய்த அற்ப காரியத்தைப்பெரிதாயும் எண்ணி அடிக்கடி சம்பாஷிப்பர். இவைகள் பந்துக்களின் விசேஷகுணங்கள். எட்டவிருந்து குளிர் காய்வது போல் பந்துக்களுடன் ஒட்டியும் ஒட்டாமலும் பழகவேண்டும். நம்முடைய ரகஸ்யத்தைச்சொன்னால் அதைப்பறை சாற்றுவோர் பந்துக்களே. இதரர்கு இந்தப்பறையடிக்கும் தொழில் பிடிக்காது. ஆதலின் பந்துக்களை விட நண்பர்களே நல்லவரென்கிறோம்.

(81) புற்றுக்குள்ளிருக்கும் சர்ப்பம் வெளியே வந்தால் தடியாலடிப்படும். குகைக்குள்ளிருக்கும் புலிவெளிப்பட்டால் வேட்டைக்காரர்களால்

சுடப்படும். முதலைஸ்வஸ்தானமாகிய தண்ணீரினின்று வெளியேவந்தால் அதை நாய்கள் கூட இழுத்துச்செல்லும். ஜலத்திலிருக்கும் மகரராசிகள் வெளியேவரின் வலைஞர்க்குப்பக்ஷணமாம். இவைகளைப்போலவே அரசன், ஸ்திரீ, தபசி ஆகியஇம்மூவர் தங்களிருப்பிடத்தை விட்டகன்றால் ஆபத்தையடைவார்கள். மயிர், பல், நகம் தங்களிடம் விட்டு வேரிடஞ்சென்றால் தங்கள் பெருமையழிந்து பிறராலிகழப்படுவார்கள். இவர்கட்கு ஸ்வஸ்தானமே சிறந்தஸ்தானம். (வா. ப. 3-4-03)

(82) பிராமணர், வேசி, வைத்தியன், கோழி, சுணங்கன் இவர்கள் யாவரும் சுயஜாதியைக்கண்டவுடனே ஒரு காரணமுமில்லாமல் சண்டையிடுவார்கள்.

(83) "அகத்தின் அழகுமுகத்தில்தெரியும்" என்பதுபோல் மனுஷர்கள் நல்லதன்மை அவர்களுடைய முகத்திற் பிரகாசிக்கும். நல்லவர், கெட்டவர் என்ற இரண்டுவகை மனிதர்களும் பிரகாசம், காந்திஹீனம் ஆகிய இரண்டுவித குணங்களைக்கொண்டிருக்கின்றன. அநேக நியாயாதிபதிகள் குற்றவாளிகள், சாக்ஷிகள், பிராதுக்காரன் ஆகிய மூன்று வகையினரையும் அவர்களுடைய முக அமைப்பால் நல்லவர், துஷ்டர் என்று கண்டு பிடிக்கின்றனர்.

(84) "ஞானமே பிரதானம்" மனிதர்களாய் பிறந்தவர்கள் ஞானத்தை ஸம்பாதிப்பதவசியம். அதைத் தேடாமல் கேவலம் பொருளைத் தேடுவதில்மட்டும் பிரயோஜனமில்லை. வராகம் மலத்தைத்தின்று தேகங்கொழுத்து சுயேச்சையாய் அலைகிறது. அதுபோல் மனிதனும் வயிறார உண்டு களிக்கிறான்.

(85) "மூத்தோர் சொல் வார்த்தையமிர்தம்" என்று படித்திருக்கிறோம். மூத்தோர் தெய்வம்தொழ என்று கூறுகிறார்கள். ஆதலின் நாம் தெய்வத்தைத்தொழவேண்டும். அவ்வாறு தொழுதால் தீவினை அகலும். சகல நற்குணங்களும் பெருகும்.

(86) விலைமதிக்க முடியாதமாணிக்கக்கல்லை சமுத்திரத்திலெறிந்து வெறுங்கையனாயிருப்பது போல், அருமையான வாழ்நாளை அவிவேகியானவன் வீணாய்க்கழித்து அல்லலடைகிறான்.

(87) பாம்பின்வாயில் அகப்பட்டதவளை பூச்சிகளை ஹிம்ஸித்துப் புசிப்பதுபோல் எமனால்பின்றொடரப்படும் பரமதுஷ்டர்கள் சாதுக்களை ஹிம்ஸிக்கின்றனர். இதென்ன மதிகேடோ தெரியவில்லை.

(88) பிடியானைமேலுள்ள காதலால் ஆண்யானைகள் சென்று குழியில் விழுகின்றன. அதுபோல் ஸ்திரீகளின்மேலுள்ள காதலால் மாந்தர்கள் மகா பாதகங்களைச் செய்கின்றனர்.

(89) எப்போதும் இரகஸ்யத்தை வெளிவிடலாகாது. இரகஸ்யம் வெளியானால் காரியம் கெட்டுப்போம். ஆணிவேர் அறுந்தால் மரம் விழுந்துபோம். அதுபோல் வியாபாரத்தின் ரகஸ்யம் வெளியானால் அதனால் லாபமுண்டாகாமற் கெட்டுப்போமன்றோ.

இரண்டாம்பாகம் முற்றிற்று.

வேலூர், 26-3-07.

---

வேலூர் சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.